

கரூர் மாவட்டம், கரூர் மேற்கு பகுதி கழகத்தின் சார்பில், நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தான்தோன்றி மலையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் ரங்கராஜ் சிறப்புரையாற்றினர். பகுதி கழக செயலாளர், துணை மேயர் தாரணி சரவணன், கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ., க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி, சுப்பிரமணி, கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தொண்டர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள்

# வரலாற்றுச் சிறப்பு மிக்க - மதுரை பொதுக் குழுக் கூட்டத்திற்கு பெருந்திரளாய் பங்கேற்போம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் சிறப்புரை!

சேலம், மே 13–

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் மு.ரா. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் சந்திரமோகன், சோமசுந்தரம், மனோகரன், முத்துலிங்கம், மலர் விழி ராஜா, சங்கர், கோபால், தமிழ்ச்செல்வன், ராஜா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார் ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், அழகுவேல், நகர செயலாளர்கள் பால சுப்பிரமணியம், வேல்முருகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், சேகர், தனசேகரன், செல்வமணி, ப்ரண்ட்ஸ் ரமேஷ், மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1;**

வருகின்ற 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள கெங்கவல்லி. ஆத்தூர், ஏற்காடு, மற்றும் வீரபாண்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட தலைவாசல் (மத்திய வடக்கு, தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர் பெத்தநாயக்கன்பாளையம்(மத்திய, வடக்கு தெற்கு), வாழப்பாடி (வடக்கு, தெற்கு, அயோத்தியாப்பட்டணம் (வடக்கு தெற்கு, ஏற்காடு, பனமரத்துப்பட்டி சேலம், வீரபாண்டி ஆகிய ஒன்றிய கழகங்கள், ஆத்தூர் நரசிங்கபுரம், ஆகிய நகர கழகங்கள், ஆட்டையாம்பட்டி இளம்பிள்ளை, மல்லூர் பனமரத்துப்பட்டி அயோத்தியாப்பட்டணம் பேளூர் வாழப்பாடி பெத்தநாயக்கன்ப்பாளையம் ஏத்தாப்பூர் கீரிப்பட்டி தம்மம்பட்டி, கெங்கவல்லி தெடாவூர், செந்தராப்பட்டி, வீரகனூர் ஆகிய பேரூர் கழகங்களில் பூத் கமிட்டி மூலம் மே மாதம் முழுக்கவும் அரசின் சாதனைகளை விளக்கும் துண்டறிக்கையை வீடு வீடாகக் கொடுப்பது எனவும் அதேசமயத்தில் ஜூன் மாதத்தில் கழக உறுப்பினர் சேர்க்கை தொடங்கியவுடன் வீடு வீடாக சென்று உறுப்பினர்களை சேர்ப்பது எனவும், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 2;**

இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள்நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும். ஒன்றிய பா.ஜ.க. அ சின் எதேச்சாதிகாரப் போக்கிலிருந்து அரசியல் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்ச ராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் நல்லாட்சியின் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் பின்வருமாறு ஒவ்வொரு நகர ஒன்றிய கழகத்திலும் குறிப்பிட்டுள்ள தேதிகளில் தலைமை கழக பேச்சாளர்கள் கொண்டு நடைபெறவுள்ளது. சேலம் 1.பெத்தநாயக்கன்பாளையம் கிழக்கு தெற்கு மாவட்டத்தில் 08.05.2025 அன்று ஒன்றியம் தமையனூர் ஊராட்சியிலும், 2 அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி ஊராட்சியிலும் 3 தலைவாசல் வடக்கு ஒன்றியம் காட்டுகொட்டாய் ஊராட்சியிலும் வருகின்ற 09.05. 2025 அன்று 1. ஆத்தூர் ஒன்றியம் கொத்தாம்பாடி ஊராட்சியிலும் 2. ஆத்தூர் நகரம் முல்லைவாடி பகுதியிலும் 3. பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம் தாழ்வள்ளம் ஊராட்சியிலும், 4 தலைவாசல் மத்திய ஒன்றியம் சார்வாய் புதூர் ஊராட்சியிலும் 5 பனமரத்துப்பட்டி ஒன்றியம் அமாணி கொண்டலாம்பட்டி ஊராட்சியிலும், வருகின்ற 10.05.2025 அன்று / நரசிங்கபுரம் நகரம் பழைய ஹவுசிங்போர்டு மற்றும் கலைஞர் நகர் பகுதியிலும் 2 வாழப்பாடி வடக்கு ஒன்றியம் குறிச்சி ஊராட்சியிலும், 3.தலைவாசல் தெற்கு ஒன்றியம் லத்துவாடி ஊராட்சியிலும் 11.05.2025 அன்று 1 ஏற்காடு ஒன்றியம் மாரமங்கலம் மற்றும் வாழவந்தி ஊராட்சியிலும், 2 வாழப்பாடி தெற்கு ஒன்றியம் பொன்னா ரம்பட்டி ஊராட்சியிலும், 3.வீரபாண்டி ஒன்றியம் பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சியிலும், 12.05.025 அன்று 1.பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் வெள்ளாளப்பட்டி ஊராட்சியிலும் 2 அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றியம் மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சியிலும், 3.கெங்கவல்லி ஒன்றியம் கூடமலை ஊராட்சியிலும் சேலம் தெற்கு ஒன்றியம் எருமாபாளையம் ஊராட்சியிலும் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், முன்னாள் இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என அனைவரும் தவறாமல் அவர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கலந்து கொள்ள வேண்டும். கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நம் அரசின் நான்காண்டு சாதனையினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் துண்டு பிரச்சூரங்கள், சுவரொட்டிகள் ஆகியவை தயார் செய்து நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டத்திற்கு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து மாவட்ட கழகத்திற்கு தெரியப்படுத்துமாறு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 3;**

பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் மதுரை மாநகரில் ஜூன்! ஆம் நாள் கூடுகிறது! நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தில், 75 ஆண்டுகளைக் கடந்து தமிழ் மக்களுக்கான சமுதாய அரசியல் பணிகளைச் சளைக்காமல் மேற்கொண்டு, நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத தேசிய சக்தியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில் நின்று தமிழ்நாட்டின் நலன் காத்து வருவதுடன்இன்று அகில இந்திய அரசியலில் நம் கழகத் தலைவரின் கருத்து என்ன என்ற எதிர்பார்ப்பு ஓங்கி நிற்கிறது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், நம் நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும் சமத்துவம். சமூகநீதி, சிறுபான்மையினர் நலன் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன் காக்கும் மாபெரும் இயக்கமாக முன்வரிசையில் நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொதுக்குழுக் கூட்டம் நம் ஒப்பற்ற கழகத் தலைவர் அறிவுறுத்தலின்படி வருகின்ற ஜூன் / ஆம் நாள் கூடல் மாநகராம் மதுரையில் நடை பெறும் இக்கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் சேலம் கிழக்கு மாவட்ட கழக சார்பாக தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.எஸ். ஜானகிராமன்

### மே 13 (1994)



கோவை மாவட்டத்தில் கழகம் வளர்த்த தியாக சீலர். கோவை மாவட்டக் கழக அவைத்தலைவர் பொறுப்பு வகித்தவர்.

கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா அவர்களின் மறைவு கேட்டு, துடித்துப் போன அவரது பள்ளி நண்பரான ஜானகிராமன் அதிர்ச்சியில் சாதிக் வீட்டு வாசலிலேயே மயங்கி விழுந்து மரணமடைந்து, நட்புக்கு இலக்கணமாக விளங்கியவர்.

“கழகத்தின் எந்தவொரு பதவிக்காகவும், பொறுப்புக்காகவும் பிடிவாதம் பிடிக்காத கண்மணி” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பா.ஜ.க.வின் பகல் வேஷ தேசபக்தி!

பயங்கரவாதிகளுக்கு எதிராக தீரத்துடன் போரிட்ட நம் ராணுவ வீரர்களைப் போற்றும் விதமாகவும், அவர்களுக்கு நம் தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் விதமாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் நடத்திய மாபெரும் பேரணி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்று.

எல்லையில் கடந்த சில நாட்களாக நீடித்த போர் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக இந்தியாவும், பாகிஸ்தானும் போரை நிறுத்துவதாக அறிவித்துள்ளதையும் நம் முதலமைச்சர் வரவேற்றுள்ளார். பா.ஜ.க.விற்கு எதிராக கருத்தியல் தளத்திலும், அரசியல் தளத்திலும், நிர்வாகத் தளத்திலும் தொடர்ந்து சமரசமின்றி சண்டை செய்து வந்தாலும், அன்னிய நாட்டுடன் போர் என்று வந்ததும், துளியும் அதில் அரசியல் செய்யாமல் முழுமையாக தமது தார்மீக ஆதரவை இந்திய ராணுவத்தினருக்குத் தந்தவர் நம் முதலமைச்சர்.

அதே சமயம் துளியும் தேசப்பற்றின்றி, பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்த ஒரே காரணத்திற்காக, அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜீ, “ராணுவ வீரர்களை ஏன் ஸ்டாலின் பாராட்டுகிறார், மோடியைத்தான் ஸ்டாலின் பாராட்ட வேண்டும் என்று சொன்னதோடு, ராணுவ வீரர்கள் என்ன எல்லையில் சென்று சண்டையா போட்டார்கள்” என்று ஒரு கேள்வியை எழுப்பி, ராணுவ வீரர்களின் தியாகத்தையும், வீரத்தையும் கொச்சைப்படுத்தியுள்ளார். தேசபக்திக்கு மொத்த குத்தகைதாரர்கள் தாங்கள்தான் என்று மக்களை ஏமாற்றி வரும் பா.ஜ.க. இந்த நிமிடம் வரை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரின் கருத்தைக் கண்டிக்கவில்லை.

அது மட்டுமின்றி பயங்கரவாதத்திற்கு எதிராக போர் செய்ய வேண்டிய பா.ஜ.க. தனது மலிவான அரசியல் போக்கை துளியும் மாற்றிக் கொள்ளாமல், தமிழ்நாடு அரசின் மீதும், முதலமைச்சரின் மீதும், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் மீதும் அறமற்ற விமர்சனங்களை முன்வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சித்து வருவது கண்டிக்கத்தக்கது. போர் முடிவுக்கு வந்திருக்கும் இச்சூழலில், ஒரு பத்திரிக்கையாளனாக சில கேள்விகளை எழுப்ப வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அதுவே இக்கட்டுரையின் நோக்கம்.

பா.ஜ.க.வை நோக்கி, மோடியை நோக்கி கேள்வி எழுப்புபவர்களையும் தேச விரோதிகள் என்று விமர்சித்து, தன் அரசியல் தவறுகளை மூடி மறைக்கும் வேலையை பா.ஜ.க. தொடர்ந்து செய்து வருவது நாட்டு மக்கள் நன்கு அறிந்த ஒன்றே! தங்களை மட்டுமே தேசபக்தர்கள் என்று காட்டிக்கொள்ளும் பா.ஜ.க.வின் தேசபக்தி உண்மையானதா? அல்லது அது பகல்வேசமா? என்பதை ஆராயத்தொடங்கினால் பா.ஜ.க.வின் தேசபக்தி பல்லிளிப்பதைப் பார்க்க முடியும்.



தமிழ்க் கேள்வி
**தி.செந்தில் வேல்,**
மூத்த ஊடகவியலாளர்

**ஆம், பஹல்காமில் அப்பாவி இந்தியர்களின் உயிர்களை பயங்கரவாதிகள் காவு வாங்கியதற்குப் பொறுப்பேற்க வேண்டிய பா.ஜ.க., தமிழ்நாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி அந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரை விமர்சிக்கிறது. இழவு வீட்டிலும் அரசியல் செய்யும் பா.ஜ.க.தான் உள்ளபடியே இந்திய நலனுக்கு எதிரி. இந்திய மக்களை எல்லா வகையிலும் இன்னலுக்கு உள்ளாக்கி வரும் பா.ஜ.க.வினர்தான் இந்தியாவில் பெரும் தேசத் துரோகிகள்.**

கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில், மன்மோகன் சிங் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்த நேரத்தில், எல்லையில் சிறு தாக்குதல் நடந்தாலும், அது மன்மோகன் சிங் அரசின் தோல்வி என்றும், காங்கிரஸ் அரசின் கையாலாகாத போக்கு என்றெல்லாம் கடும் விமர்ச னங்களை வைத்தவர் மோடியும் பா.ஜ.க.வினரும். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு என்ன நடக்கிறது.?

**எல்லையில் அத்துமீறிய சீனா ஒரு சிறு கிராமத்தையே உருவாக்கிவிட்டது. சாலை அமைத்து, வீடுகள் கட்டிவிட்டது.**

**உரி தாக்குதலில் 19 இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களைப் பலி கொடுத்தோம்.**

**பதான் கோட் விமானப்படைத் தாக்குதலில் 7 பாதுகாப்புப் படை வீரர்களை இழந்தோம்.**

**புல்வாமா தாக்குதலில் 46 பாதுகாப்புப் படை வீரர்களைப் பலி கொடுத்தோம்.**

**அனந்த்நாக் மாவட்டத்தில் பயணிகள் பேருந்து மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 7 பேரைப் பலி கொடுத்தோம்.**

**தற்போது பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் 26 பேரை பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குப் பலி கொடுத்துள்ளோம்.**

இப்படி மோடி ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாதிகள் இந்திய எல்லைக்குள் அத்துமீறி ஊடுருவுவதும், பாதுகாப்புப் படை வீரர்களையே கொன்று குவிப்பதும் வாடிக்கையாகிவிட்டது பெரும் துயரம். இது குறித்த குற்ற உணர்வு கொஞ்சமும் இன்றி, இதற்கு தார்மீகப் பொறுப்பேற்க வேண்டிய பிரதமரும், பா.ஜ.க.வினரும், இதையும் தங்கள் தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தும் போக்கு அவலத்தின் உச்சம்.

கோவையில் கார் சிலிண்டர் குண்டு வெடித்த அடுத்த சில நிமிடங்களில், தமிழக முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும், இந்த ஆட்சியே கலைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் பா.ஜ.க.வினர் கூக்குரலிட்டனர். ஆனால், மிகுந்த பொறுமையோடும், நிதானத்தோடும் அதே சமயம் உறுதியோடும் செயல்பட்ட நம் முதலமைச்சர், இது தேச நலன் சார்ந்த பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு ஒன்றிய அரசிற்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார். அது குறித்த விசாரணையை NIA விற்கு உடனடியாக மாற்றினார். தற்போதும் பஹல்காமில் தாக்குதல் நடைபெற்ற உடன், ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பைத் தரும் என்று சொன்னதோடு, இது எந்த இடத்திலும் அரசியலாகிவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையோடு செயல்படுகிறார்.

இந்தப் பண்பு தி.மு.க.வின் இரத்தத்திலேயே ஊறிய ஒன்று. ஆம். திராவிட நாடு கோரிக்கையை முன் வைத்த அண்ணா தான், சீனா உடனான போர்ச் சூழலின் போது, “வீடு நன்றாக இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும்” எனச் சொல்லி, திராவிட நாடு கோரிக்கையைத் தவிர்த்தார். “அதன் காரணிகள் அப்படியே இருக்கின்றன” என்பதையும் சொல்லிச் சென்றார்.

1971-ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின்போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, முதலமைச்சராக இருந்த நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், தேசத்தின் பாதுகாப்பிற்காக 6 கோடி ரூபாயை அன்றைய காலகட்டத்திலேயே திரட்டிக் கொடுத்தார். போரில் வீர மரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு நிதி மற்றும் நிலம் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

1999-ஆம் ஆண்டு கார்கில் போரின் போது. அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் இந்தியாவிலேயே அதிகபட்ச நிதியாக 50 கோடி ரூபாயைத் திரட்டி வழங்கியவர் நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

போர்க்காலங்களில் மட்டுமல்ல, பேரிடர் காலங்களிலும் முதல் உதவிக்கரத்தை நீட்டுவது தி.மு.க. தான்.

குஜராத்தில் பூகம்பத்தால் மக்கள் மாண்டு மடிந்தபோது, 30 கோடி ரூபாயைத் திரட்டித் தந்தவர் கலைஞர் அவர்கள்.

அண்ணா, கலைஞர் வழியில் வந்த நம் திராவிட மாடல் அரசின் நாயகர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும், இந்த விவகாரத்தில் முழுமையாக ஒன்றிய அரசுடன் துணை நிற்கிறார்.

**ஆயினும், இந்தியாவின் வட எல்லையைக் காக்கத் தவறிய பா.ஜ.க., கொஞ்சம் கூட அதற்காக வருந்தாமல் இந்தியாவின் தென் எல்லையில் இருக்கும் ஒரு மாநில முதலமைச்சரை இதற்காக விமர்சிக்கிறது என்றால் பா.ஜ.க. எத்துணை அபாயகரமான கட்சி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பயங்கரவாதிகளுக்கு எதிரான போருக்கு ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் துணை நிற்கிறது. ஆனால், தேர்தல் ஆதாயத்திற்காக பக்கத்து வீட்டு பாயுடன் சண்டை போடச் சொல்லும் பா.ஜ.க.வின் சதிக்கு ஒரு போதும் தமிழன் ஏமாற மாட்டான்.**

இந்தியச் சுதந்திரத்திற்கு ஆர்.எஸ்.எஸ்.சின் பங்கு என்று வரலாற்றில் எதுவுமே இல்லை. ஆனால், ஏராளமான இசுலாமியர்கள் இந்தியச் சுதந்திரத்திற்காக பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்கள் சுதேசிக் கப்பல் கட்ட நிதி வேண்டியபோது, முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன் 2 லட்சம் ரூபாயை நிதியாகக் கொடுத்தவர் ஹாஜி பக்கீர் முகமது என்ற இசுலாமியர்.

தேசப்பிதா மகாத்மா காந்தி தமிழகம் வந்தபோது, வள்ளல் ஜமால் முகமது அவர்கள், நிரப்பப்படாத காசோலையை இந்திய விடுதலைப் போராட்டத்திற்காகத் தந்தவர் என்பதை மறுக்க முடியுமா ?

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இந்திய விடுதலைக்காக ராணுவம் கட்டிய போது, தன் சொத்துக்கள் அனைத்தையும் தேச விடுதலைக்காகத் தந்தவர் ஹபீத் என்ற இசுலாமியர். தேச விடுதலைக்குத் தேவையான மருந்தின் பெயர் ஹபீத் என்று வீதியெங்கும் முழங்கினார் நேதாஜி.

பொருளாதாரம் மட்டுமின்றி தங்கள் இன்னுயிரையும் தந்த இசுலாமியர்கள் ஏராளம். கேரளாவில் இருந்து வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய நூற்றுக்கணக்கான இசுலாமியர்களை ஒரே கூட்ஸ் பெட்டியில் அடைத்து அவர்களை கேரளாவில் இருந்து கோவைக்கு அனுப்பியது அன்றைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு. அந்த சரக்கு ரயில் திருச்சி வந்தபோது அப்பெட்டி திறக்கப்பட்டது. அதில் அடைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் இறந்துபோயிருந்தனர்.

இப்படி இந்து, கிறிஸ்தவர், இசுலாமியர் என்ற பாகுபாடின்றி அனைவரும் போராடிப் பெற்றுத் தந்தது நம் சுதந்திரம். ஆனால், அதை தன் சுய அரசியல் இலாபத்திற்காக பா.ஜ.க. பயன்படுத்துகிறதே, இதன் பெயரும் பாசிசம்தான்.

இன்றைக்கு மலிவான அரசியல் விமர்சனங்களை ஆதாரமின்றி வீசும் பா.ஜ.க.வினர் யாரேனும் கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா?

**1.பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் யோகா குரு பாபா ராம்தேவின் நண்பர் வேத பிரதாப் வைத்தி என்பவர் மும்பை குண்டு வெடிப்பின் மூளை என்று தேடப்படும் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் சென்று சந்தித்து வந்தாரே. அது குறித்து ஏதும் விசாரிக்கப்பட்டதா? அவரை ஏன் கைது செய்யவில்லை வேதபிரதாப் வைத்திக் என்பவர் ஹபீஸ் சயீத்தை பார்க்கச் சென்றது பா.ஜ.க. அரசின் உளவுத்துறைக்குத் தெரியுமா?**

**2.பா.ஜ.க.வின் ஐ.டி.விங் நிர்வாகி தலீப் ஹுசேன் ஷா என்பவன் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர் - இ - தொய்பாவில் இருந்தானே. தன் சொந்தக் கட்சி நிர்வாகி பயங்கரவாத அமைப்பில் இருப்பதைக் கூட கண்டுபிடிக்க முடியாத மோடி அரசின் உளவுத்துறைச் செயல்பாட்டை மோடி கண்டித்தாரா? அது குறித்து விசாரணை என்ன நடத்தப்பட்டது?**

**3.அந்த பயங்கரவாதி இணையத்தின் மூலம் தங்கள் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்துவிட்டதாகவும், மற்றபடி அவருக்கும் பா.ஜ.க.விற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், பா.ஜ.க. தலைவர்கள் கூறிய நிலையில், அந்த பயங்கரவாதி பா.ஜ.க. தலைவர்களுடன் மேடையில் நெருக்கமாக இருந்த புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியதே, அதன் பின்னராவது அது குறித்து விசாரிக்கப்பட்டதா?**

**4.எந்த முன்னறிவிப்பும் இன்றி அன்றைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் வீட்டு திருமண விழாவிற்கு திடீரென்று சென்றாரே பிரதமர் மோடி. அது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது, நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சி என்று பா.ஜ.க.வினர் பதில் தந்தார்களே. பாகிஸ்தான் பிரதமருடன் நல்லிணக்கம் ஏற்படுத்த மோடி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், பக்கத்து வீட்டு இந்திய இசுலாமியருடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த யாரும் முயன்றால் அவர்களை தேச விரோதி என்போம் என்ற பா.ஜ.க.வின் கூற்று சரியா?**

**5.மன்மோகன் சிங் ஆட்சியில் எல்லை பலவீனமாக இருப்பதற்குக் காரணம் டெல்லி பலவீனமாக இருக்கிறது என்று சொன்னாரே அன்றைய குஜராத் முதல்வர் மோடி. இப்போது எல்லை பலவீனமாக இருப்பதற்கு டெல்லியில் பொறுப்பில் இருக்கும் தாம்தான் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளும் துணிவு மோடிக்கு உள்ளதா?**

**6.பஹல்காமில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் போட்ட திட்டம் குறித்து மோடிக்கு முன்பே தெரிந்த காரணத்தால்தான் அவரது காஷ்மீர் பயணத் திட்டத்தை கடைசி நிமிடம் ரத்து செய்தார் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே குற்றம் சாட்டுகிறாரே, அது உண்மையா?**

**7.பஹல்காமில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது ஏன் பாதுகாப்புப் பணியில் ராணுவ வீரர்கள் இல்லை.**

**8.பஹல்காம் தாக்குதல் செய்தியை அறிந்ததும் சவுதியில் இருந்து இந்தியா திரும்பிய பிரதமர் மோடி, ஏன் பஹல்காம் செல்லாமல் பீகாருக்குச் சென்றார்? (பீகாரில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் வர உள்ளது)**

**9.அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் காக்கும் போராட்டத்தில் செய்யது இப்ராஹிம் ஷா என்ற குதிரை ஓட்டி இறந்து போன நிலையிலும், ஒரு இசுலாமியர் கூட பயங்கரவாதிகள் தாக்குதலில் பலியாகவில்லை என்ற பொய்யை வேகமாகப் பரப்பியதன் நோக்கம் என்ன?**

**10. உயிருடன் திரும்பிய சுற்றுலாப் பயணிகள், அங்கிருந்த இசுலாமிய வாகன ஓட்டிகள், உள்ளிட்டோர் தங்களைப் பாதுகாப்பாக அழைத்து வந்தனர். பள்ளிவாசல்களில் தங்க வைத்தனர். உணவு உள்ளிட்டவற்றைத் தந்து உதவினர் என்று சொன்னபின்பும், சமூக வலைதளங்களில் பயங்கரவாதிகளுக்கு எதிரான பிரச்சினையை இந்து - இசுலாமியர் பிரச்சினையாக மாற்றியது ஏன்?**

இன்னும் பல கேள்விகள் நீள்கின்றன. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான தாக்குதலை நிறுத்தச் சொல்லி அமெரிக்க அதிபர் சொல்லியிருப்பது இதுவரை இந்திய வரலாற்றில் இல்லாத ஒன்று. இது குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி எழுப்பியுள்ள கேள்விக்கு இந்த நிமிடம் வரை பா.ஜ.க.விடம் இருந்து பதிலில்லை. இது போன்ற எந்தக் கேள்விகளுக்கும் பா.ஜ.க. விடம் பதில் இருக்காது. காரணம் அவர்கள் போலி தேச பக்தர்கள்.

மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்தாள்வதே அவர்களின் நோக்கம்.

**இந்துக்களின் பாதுகாவலர்கள் என்று போலி வேடமிடும் பா.ஜ.க.வினர் யாரும் சமீபத்தில் நடைபெற்ற நீட் தேர்வின் போது, ஒன்றிய அரசின் வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி மாணவிகளின் மேலாடை பட்டன்கள், தாலி உள்ளிட்டவை கூட அகற்றப்பட்டதைக் கண்டிக்க மனமில்லாதவர்கள். இந்த கபடவேடதாரிகளின் மதவெறி பொய்ப் பரப்புரைகளுக்கு தமிழக மக்கள் ஒரு போதும் இரையாகிவிட மாட்டோம். இரையாகிவிடக் கூடாது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என்று எல்லாக் குறியீடுகளிலும் வேகமாய் முன்னேறும் தமிழகம் தொடர்ந்து இன்னும் பல சாதனைகளைச் செய்யட்டும். “நாடு போற்றும் நான்காண்டு.. தொடரட்டும் பல்லாண்டு” தமிழ்நாடு போராடும்!**

**தமிழ்நாடு வெல்லும்!.**